O.S.31/2016

PW 1 Ranjanadevi

Date: 12.03.2018

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1ம் பிரதிவாதி தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு சொத்து அவர்களுக்கு சொந்தம் என்று வழக்கு தொடரப்பட்டுள்ளது. நான் எங்கள் தரப்பில் வழக்கறிஞரை வைத்து பதில் தாக்கல் செய்திருக்கிறோம். பிரதிவாதி, தான் உழைத்து சாமபாதித்த சொத்து என்று அந்த வழக்கில் சொல்லியுள்ளார். தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் உள்ள சொத்து விவரம் இவ்வழக்கின் சொத்து விவரமும் ஒன்றுதான். இரு வழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடந்த மாறுதல் வழக்கு போடப்பட்டுள்ளது. மேற்கண்ட இருவழக்குகளையும் ஒன்றாக சேர்த்து நடத்த எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அப்பா இறக்கும்வரை எல்லோரும் கூட்டாக அனுபவித்து வந்தோம். அப்பா இறந்தவுடன் பிரதிவாதி அனுபவித்து வருகிறார். தற்பொழுது வழக்கு சொத்தை அனுபவிக்க 1ம் பிரதிவாதி விடவில்லை. வழக்கு சொத்தில் இரும் வருமானத்தை 1ம் பிரதிவாதி தான் அடைந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் நிலங்களை இன்றுவரை 1ம் பிரதிவாதிதான் அனுபவித்துவருகிறார் என்று சொன்னால் சரி. எனக்கு 2013ம் வருடம் நடந்தது. இது எனக்கு 2வது திருமணம் ஆகும். 2002ம் வருடம் முதல் திருமணம் நடந்தது. முதல் கணவர் பெயர் ராஜேந்திரன். ராஜேந்திரனை எனக்கு நல்ல முறையில் சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்தார்.தற்பொழுது ராஜேந்திரன் உயிருடன் இல்லை. 2வது திருமணத்திற்கு என் கணவருடன் தான் தற்பொழுது வரை வாழ்ந்து வருகிறேன். 2, 3, 5 வாதிகள் திருமணமாகி கணவர்களுடன் வசித்து வருகிறார்கள். முதல் பிரதிவாதியுடன் எந்த காலத்திலும் கூட்டாக சுவாதீனம் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் பாரா5ல் தேக்கு மரங்களை வெட்டி பிரதிவாதி அபகரித்துக்கொண்டார் என்று தருமபுரி பி1 காவல் நிலையத்தில் சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் புகார் கொடுத்திருக்கிறோம். எங்களுக்கும்,

WEB COPY

பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதன் படி பிரதிவாதி கொடுக்கவில்லை. புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நர்ன புகார்கொடுத்து போலிசார் சமாதானம் பேசி எங்களுக்கும் தொகை கொடுக்க வேண்டும் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் 6 மீன் குழிகள் உள்ளது. வருடத்திற்கு *1* மீன் குழிக்கு ரூ.25,000 வாடகையாக விடப்பட்டிருக்கிறது. வாடகை கொடுத்தவர்கள் பெயர் எழுதிவைத்திருக்கிறேன். சேட்டு, சுப்ரமணி, தங்கமணி வாடகைக்கு விட்டிருக்கிறார். வீட்டை உபயோகப்படுத்தால் நான்கு வீட்டை குடோன்களாக வாடகைக்கு விட்டிருக்கிறார். நான் சொல்வது மீன் குழிகளையும், குடோன்களையும் பிரதவாதி வாடகைக்கு விட்டிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் அந்த காலத்திலிருந்து கூட்டு சுவாதீனத்தில் இல்லாததால் தாவா சொத்தில் பாகம் கேட்க அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் 5ம் இனச்சொத்து என்னுடைய சித்தப்பா பாண்டுவிற்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியிருக்கிறேன். என் சித்தப்பா அதை கிரயத்திற்கு வாங்கினார். எந்த ஆண்டு என்று நினைவில்லை. என் சித்தப்பா பாண்டு நான் சிறுவயதில் இருக்கும்போதே இறந்துவிட்டார். ஜுன் மாதம் 27ம் தேதி 2016ல் வழக்கிறஞர் அறிவிப்பை பிரதிவாதிக்கு கொடுத்தேன். சட்ட அறிவிப்பிற்கான விவரத்தை நான், என் அம்மா, என் சகோதரிகள் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்று கொடுத்தோம். அதற்கு பிரதவாதி பதில் கொடுத்திருந்தார். பிரதிவாதி அந்த பதில் அறிவிப்பில் என் தந்தையும், பிரதிவாதியும் சேர்ந்து சம்பாதித்ததாக சொல்லியிருந்தார். உயில் மோசடியானது என்பதை பொருத்து தான் வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அதை இந்த வழக்கில் தான் சொல்லியிருக்கிறோம். உயிலை ரத்து செய்யச்சொல்லி பரிகாரம் கேட்கவில்லை. பிரதிவாதி பெயருக்கு சொத்துகளை உயில் எழுதி என் அப்பா இறந்திருப்பதால் உயில் படி சொத்தை பிரதிவாதி அனுபவித்து அடைந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

WEB COPY